DEPOSITION OF WITNESS
(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM
C.C.No.59/2026
PW - 8

| | | |
|---|---|---|
| Name | : | பாலாஜி (Lw - 9) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 21.05.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டம் பழையபாளையத்தில் குடியிருந்து ரியல்எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன்.

தேதி நினைவில் இல்லை. சுமார் 2 மாதங்களுக்கு முன்னர் சுமார் 10.30 – 11.00 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தேன். திடீர் என சத்தம் கேட்டது நான் என்னவென்று சாலையில் வந்து பார்த்தேன் அப்போது அங்கு இருந்த ஆலமரத்திற்கு அடியில் இருந்த பள்ளத்தில் கார் ஒன்று கவிழ்ந்து கிடந்தது. நான் என்னவென்று விசாரித்தபோது எதிரி தனது குடும்பத்துடன் வீட்டில் இருந்து கிளம்பி ஆலமரத்திற்கு அருகில் இடதுபுறமாக திரும்பும்போது காரை கவனக்குறைவாக ஓட்டியதால் கார் கட்டுப்பாட்டை மீறி அங்கு இருந்த பள்ளத்தில் கவிழ்ந்துவிட்டதாக சொன்னார்கள். பின்பு நானும் அருகில் இருந்தவர்களும் காரில் இருந்தவர்களை மீட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். எதிரி கண்ணனின் மனைவிக்கு இடது கண் வீக்கமாக இருந்தது. கண்ணனின் மாமியார் நெஞ்சு வலியால் துடித்துக்கொண்டிருந்தார். எதிரிக்கும் அவரது மகனுக்கும் எந்த அடியும் படவில்லை. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**